Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, NOVEMBER 19 2024

செவ்வாய்க்கிழமை நவம்பர் 19, 2024 | ஒளி: 10 கதிர்: 095 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

பரீட்சை பெறுபேறுகளை வெளியிட

## இடைக்காலத் தடை

அண்மையில் நடந்து முடிந்த 2024ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதை இடைநிறுத்தி உயர் நீதிமன்றம் திங்கட்கிழமை (18) இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த வருட புலமைப்பரிசில் பரீட்சையில் சில வினாக்கள் கசிந்தமை தொடர்பில் பெற்றோர்கள் சிலரினால் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

ஜனாதிபதி அனுர தலைமையில்

# புதிய அமைச்சரவை நியமனம்



ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கத்தின் புதிய அமைச்சரவை அமைச்சர்கள் திங்கட்கிழமை (18) ஜனாதிபதி செயலகத்தில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

அதற்கமைய நிதி, பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் அமைச்சுக்களை சமகால ஜனாதிபதி அனுகுமார திசாநாயக்க தன்வசம் வைத்துள்ளார்.

பிரதமராக கலாநிதி ஹறினி அமரசூரிய பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

அவருடன் மேலும் 21 அமைச்சர்கள் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

தொடர்ச்சி P6

# பிரிவினை அரசியலுக்கு முற்றுப்புள்ளி



பிரிவினை அரசியல் இனியும் தேவையில்லை என்பதை இத்தேர்தல் நிரூபித்துள்ளதாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் திங்கட்கிழமை (18) புதிய அமைச்சரவை பொறுப்பேற்றுக்கொண்டது.

புதிய அமைச்சர்கள் முன்னிலையில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில்,

பொதுத் தேர்தலின் போது, தேசிய மக்கள் சக்திக்கு பலமான ஆணையை வழங்கிய அனைத்து மக்களுக்கும் எமது நன்றிகள். பொதுமக்களின் எதிர்ப்பார்ப்புக்களையும் அபிலாஷைகளையும் நிறைவேற்றுவதே அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

தொடர்ச்சி P2

## இன்னொரு தேர்தலுக்கு தயாராகும் ஆணைக்குழு

நாட்டின் பொதுத் தேர்தல் முடிவடைந்ததையடுத்து, இம்மாதம் 27ஆம் திகதி மீண்டும் கூடவுள்ள தேர்தல் ஆணைக்குழு, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடவுள்ளது.

தொடர்ச்சி P2

## தேசிய பட்டியல் தெரிவு பொருத்தமானதல்ல

வி.ரி.சகாதேவராஜா



இலங்கை தமிழரசுக் கட்சியின் உயர் பீடம் நேற்று கூடி வெளியிட்ட தேசிய பட்டியல் தெரிவு பொருத்தமானதல்ல. அது ஒரு பெண்ணுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச கிளையின் தலைவரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் காரைதீவில் திங்கட்கிழமை(18) இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

இராணுவ முகாமில்

## 25 இராணுவ வீரர்களுக்கு காய்ச்சல்



மன்னார் - விடத்தல்தீவு பகுதியில் உள்ள இராணுவ முகாமில் சுமார் 25 இராணுவ வீரர்கள் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

காய்ச்சல் தொற்றையடுத்து, அங்குள்ள இராணுவ வீரர்களைக் குறித்த முகாமிலேயே தனிமைப்படுத்தியுள்ளதாக இராணுவம்குறிப்பிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## லொஹான் தம்பதிக்கு விளக்கமறியல் நீடிப்பு



பதிவு செய்யப்படாத இலக்கத் தகடு இல்லாத சொகுசு கார் ஒன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை மற்றும் அவரது மனைவி ஷஷி பிரபா ரத்வத்தை ஆகியோரினால் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு நுகேகொடை நீதவான் நீதிமன்றத்தினால் திங்கட்கிழமை (18) நிராகரிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## 150 உறுப்பினர்கள் வெளியேற்றம்

கடந்த காலங்களில் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய சுமார் 150 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற அரசியலிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இவர்களில் 92 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இம்முறை தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியுற்றுள்ளதுடன், 58 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிடவில்லை.

தொடர்ச்சி P2

## தேசியப் பட்டியலில் ரவி



நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் ‘சிலிண்டர்’ சின்னத்தில் போட்டியிட்ட புதிய ஜனநாயக முன்னணிக்கு இரண்டு தேசியப்பட்டியல் ஆசனங்கள் கிடைத்துள்ளன.

அதனடிப்படையில் ரவி கருணாநாயக்கவை தேசிய பட்டியல் உறுப்பினராக நியமித்துள்ளதாக அந்த கட்சியின் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

“தவறாக சென்றால்

## அரசாங்கம் மீது நடவடிக்கை எடுப்போம்”



தற்போதைய அரசாங்கத்திற்கு மக்களால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மக்கள் வழங்கிய இந்த ஆணையை ஐக்கிய மக்கள் சக்தி மதிக்கிறது. தற்போதைய அரசாங்கம் அதிகாரத்தைப் பெறுவதற்காக நாட்டு மக்களுக்குப் பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

கொழும்பு- எதுல்கோட்டையில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சக்தி தலைமை அலுவலகத்தில் திங்கட்கிழமை (18) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## “ஊழலை எதிர்க்க அனுரவுக்கு தோள் கொடுப்போம்”

நாட்டின் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் படுதோல்வி அடைந்தாலும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவத்தில் எந்த மாற்றங்களும் ஏற்படாது என்றும் புதிய பாராளுமன்றத்தில் சஜித் பிரேமதாச தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவராக செயற்படுவார் எனவும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முன்னெப்போதும் இல்லாத வகையில் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் அதிக பெரும்பான்மையைப் பெற்றுள்ள நிலையில்,

தொடர்ச்சி P2

## ரணில் எதிர்ப்பு



புதிய ஜனநாயக முன்னணியில் கூட்டணி வகிக்கும் கட்சிகளின் அனுமதியின்றி தன்னிச்சையான முறையில் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் பெயர் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக புதிய ஜனநாயக முன்னணியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## “சஜித்தின் வீழ்ச்சிக்கு பலவீனமே காரணம்”



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக மாத்திரமின்றி, எதிர்க்கட்சி தலைவராகவும் சஜித் பிரேமதாச திறமையான முறையில் செயற்படவில்லை என சரத் பொன்சேகா குற்றம் சுமத்தியுள்ளார்.

சஜித் பிரமேதாசவின் திறமையற்ற நிர்வாகத்தின் காரணமாகவே இன்று ஐக்கிய மக்கள் சக்திக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# தேசிய பட்டியல் தெரிவு பொருத்தமானதல்ல

அதேவேளை, இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமை அல்லது செயலாளர் பதவி கிழக்கு மாகாணத்திற்குக் குறிப்பாக சாணக்கியனுக்கு வழங்கப்பட வேண்டும் என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அம்பாறை மாவட்டத்தில் இழந்த பிரதிநிதித்துவத்தை நாங்கள் மீண்டும் நிலைநாட்டியிருக்கின்றோம் . கிழக்கில் ஐந்து ஆசனங்கள் கிடைத்தது.

அதாவது, தமிழ்த் தேசியம் கிழக்கில் தான் வென்றுள்ளது. வடக்கில் கட்சி தோல்வி அடைந்தது என்று எமது ஊடகப் பேச்சாளர் சுமந்திரன் ஐயா கூறியிருந்தார். அது உண்மை.

இலங்கை தமிழரசு கட்சியினுடைய தேசிய பட்டியல் ஆசனத்தை நேற்று இடம்பெற்ற உயிர் பீடத்தில் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் சத்தியலிங்கம் ஐயாவுக்கு வழங்கி உள்ளார்கள். இது பொருத்தமானதாக இல்லை.

குறிப்பாக இந்த நாட்டில் பால்நிலை சமத்துவம் என்கின்ற அடிப்படையிலே பெண்களுக்கும் எமது கட்சியினால் ஒரு உரிமை வழங்கப்பட்டிருக்க வேண்டும் . வடக்கு அல்லது கிழக்கில்

அதாவது, ஒரு பெண்ணுக்கு அத் தேசிய பட்டியல் ஆசனம் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

குறிப்பாக இந்த, புதிய அனுர அரசாங்கத்தில் 18 பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது. இன்று அமைச்சரவையில் பிரதமராக ஒரு பெண்ணும் மகளிர் சிறுவர் விவகார அமைச்சராக ஒரு தமிழ் பெண்ணும் நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த பாராளுமன்ற தேர்தலிலே ஒரு ஆசனம்தான் எங்களுக்குக் கிடைக்கப்பெற்று இருந்தது. ஏனைய கட்சியில் மற்ற ஆசனம். ஆனால் இம்முறை அங்குள்ள மக்கள்

மூன்று பாராளுமன்ற உறுப்பினரை அமோக வெற்றியைத் தந்திருக்கிறார்கள். மட்டக்களப்பு மாவட்ட மக்களும் அங்குத் துடிப்பாக வேலை செய்கின்ற இலங்கைத் தமிழர் கட்சியின் சாணக்கியன் சகோதரர் அவர்களும்.

இன்று மட்டக்களப்பு மாவட்டத்திலும் கிழக்கு மாகாணத்திலும் எங்களுடைய இலங்கைத் தமிழர் கட்சி உடைய தேசியத்தை நிலைநாட்டியிருக்கின்றது.

கிழக்கு மக்கள் சரியானது பாடம் இருக்கின்றார்கள் .வட கிழக்கைச் சுத்தம் செய்திருக்கின்றார்கள். கடந்த கால

கடந்த காலங்களிலே அரசாங்கத்தோடு ஒட்டிக்கொண்டு தங்களுடைய வளர்ச்சியைச் செய்தவர்கள் ராஜாங்க அமைச்சர்கள் அமைச்சர்கள் என்று அனைவரையும் சுத்தம் செய்து தூசி தட்டி ஒரு தூய வடகிழக்கு பிரதேசமாக மாற்றி வைத்திருக்கின்றார்கள் .

எனவே நாம் இலங்கை தமிழரசுக் கட்சியில் மேலும் வலுப்பெறக்கூடிய செயற்பாடுகளைசெய்ய வேண்டும் .

இப்போது தலைமை செயலாளர் பதவிகளை வடக்கிலே வைத்துக் கொண்டிருப்பதை இனியும் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. குறிப்பாக மிக அவசரமாக இலங்கை தமிழரசுக் கட்சி உயர் பீடம் கூடி

வடக்குக்கு கிழக்குக்கென்று இல்லாமல் தலைமை எங்களுக்கு முக்கியமான ஒரு பொறுப்பு கிழக்கு மாகாணத்தில் கிடைக்கப்பெற வேண்டும் .குறிப்பாக அந்த பொதுச்செயலாளர் அல்லது தலைமைப் பதவி கிடைக்கப் பெற வேண்டும். இன்று பல கட்சிகள் கூறுவது போல, மீண்டும் இந்த பதவி ஆசைக்காக உண்மைக்கு புறம்பான தெரிவுகள் மேற்கொள்ள பட்டுள்ளது.

இவ்வாறு செய்வதன் ஊடாக மக்களை வெறுப்படைய செய்ய வேண்டாம்.

மக்கள் கடந்த காலங்களிலே தலைமைகளுடைய பிழையான வழிநடத்தல் காரணமாக இந்த தேர்தலில் தகுந்த பாடத்தை கற்பித்துள்ளனர்.

ஆகையால் இந்த தேசியப் பட்டியல் நிச்சயமாக மாற்றம் செய்யப் பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# பிரிவினை அரசியலுக்கு முற்றுப்புள்ளி

அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வரம்பற்ற அதிகாரத்தைப் பொறுப்புடன் கையாள வேண்டும். மக்களின் கடின உழைப்பு மற்றும் எதிர்பார்ப்புகள் அனைத்தையும் வெற்றியடையச் செய்யும் வகையில் நல்லாட்சி இருக்க வேண்டும்.

நாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பெரும்பான்மை அதிகாரம் ஆட்சியாளர்களுக்குக் கிடைத்தது. அதிகாரத்தின் ஊடாக மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். மக்கள் வழங்கியுள்ள அதிகாரமானது பொறுப்பு வாய்ந்தது. மக்களுக்கும் பொறுப்பு உள்ளது. எந்தவொரு அதிகாரம் வழங்கப்பட்டாலும் அதில் பொறுப்புடன் செயற்பட வேண்டியுள்ளது.

வெற்றி பெரியது, அந்த வெற்றிக்காக நம் மீது சுமத்தப்பட்ட பொறுப்புகள் சமமானவை. பிரிவினை அரசியல் இனியும் தேவையில்லை என்பதை இத்தேர்தல் நிரூபித்துள்ளது.

இலங்கையின் அரசியல் கலாசாரம் நீண்ட காலமாக வடக்கை தெற்கிற்கு எதிராகவும் அதற்கு நேர் மாறாகவும் நிறுத்தும் முயற்சிகளால் வரையறுக்கப்படுகிறது.

இருப்பினும், பிளவுபடுத்தும் அரசியல் இனியும் ஆட்சி செய்யாது என்பதை இந்தத் தேர்தல் காட்டுகிறது. இது அனைத்து மக்களின் அபிலாஷைகளையும் வெற்றிகரமாக ஒரே மையத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

தேசிய மக்கள் சக்திக்கு வலுவான மக்கள் ஆணையை வழங்க முயற்சித்த அனைத்து மக்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். தேசிய மக்கள் சக்தியின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு அனைத்து மக்களின் ஆதரவும் தேவை.

இதன் பின்னர் நாம் வெற்றிகரமான முறையில் அனைத்து வேலைத்திட்டங்களையும் முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். இலங்கையை மறுமலர்ச்சி யுகத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# இடைக்காலத் தடை

அதற்கமைய, குறித்த மனு இன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட போது, பிரிதி பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி மற்றும் மகிந்த சமயவர்தன ஆகியோரைக் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

# 150 உறுப்பினர்கள் வெளியேற்றம்

2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் 77 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தோல்வியடைந்த நிலையில் இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் இத்தொகை 94 ஆக அதிகரித்துள்ளது.

இதில் 70க்கும் மேற்பட்டோர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஏனையோர் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தி கடந்த பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகித்தனர்.

மஹிந்த அமரவீர, அஜித் ராஜபக்ச, நிபுன ரணவக்க, கஞ்சன விஜேசேகர, கலாநிதி மனுச நாணயக்கார, கலாநிதி ரமேஷ் பத்திரன, சம்பத் அத்துகோரள, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பவித்ரா வன்னியாராச்சி, எஸ்.எம்.சந்திரசேன, சசீந்திர ராஜபக்ச, சுசில் பிரேமஜயந்த, ரொஷான் ரணசிங்க, திலும் அமுனுகம, ஜனக வக்கும்புர, விதுர விக்ரமநாயக்க, இந்திக்க அநுருத்த, பிரசன்ன ரணவீர, மதுர விதானகே, பிரேமநாத் சி.தொலவத்த, ஜகத் குமார சுமித்ராராச்சி, பியல் நிஷாந்த, கலாநிதி சன்ன ஜயசுமன, துமிந்த திஸாநாயக்க, வீரசுமண வீரசிங்க, சஞ்சீவ எதிரிமான்ன, ஹரின் பெர்னாண்டோ, கோகிலா ஹர்சனி, டி.பி.ஹேரத், அனுப பெஸ்குவல் ஆகியோரும் இந்தத் தேர்தலில் தோல்வியுற்றுள்ளனர்.

டிலான் பெரேரா, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, பிரமித்த பண்டார தென்னக்கோன், பந்துலால் பண்டாரிகொட, சரித ஹேரத், சிசிர ஜயக்கொடி, சந்திம வீரக்கொடி, டீ.வீரசிங்க, அநுர பிரியதர்ஷன யாப்பா, அசங்க நவரத்ன, சாந்த பண்டார, மஞ்சுளா திசாநாயக்க, ருவன் விஜயவர்தன, நிமல் லன்சா, அசோக்க பிரியந்த, சிந்தக்க மாயாதுன்னே, லசந்த அழகியவன்ன, வசந்த யாப்பா பண்டார, திஸ்ஸ அத்தநாயக்க, ஹேர்ல் குணசேகர, ரஞ்சன் ராமநாயக்க, வடிவேல் சுரேஸ், நளின் பெர்னாண்டோ, உபுல் மஹேந்திர, டிலான் ஜயதிலக்க, சரத் வீரசேகர, சுசில் பிரேமஜயந்த, இசுரு தொடங்கொட, மொஹான் பிரியதர்சன டி சில்வா, பிரேமலால் ஜயசேகர, சந்திரசிறி முத்துகுமாரன, ராஜிக்கா விக்ரமசிங்க ஆகியோரும் தோல்வியுற்றுள்ளனர்.

தாரக்க பாலசூரிய, நாலக்க பண்டார, முதித்தா பிரியதர்சினி, ஜகத் பிரியங்கர, சுமித் உடுகும்புர, அருந்திக்க பெர்னாண்டோ, விஜித்த பேருகொட, ராஜித்த சேனாரத்ன, சிவநேசத்துரை சந்திரகாந்தன், நிமல் சிறிபால டி சில்வா, புத்திக்க பத்திரன, ஹெரான் விக்ரமரத்ன, மனோ கணேசன், ஹிருணிக்கா பிரேமசந்திர, அசோக்க அபேசிங்க, துசார இந்துனில், லலித் எல்லாவெல, லலித் வர்ணகுமார, விஜித் விஜித்தமுனி, நியோமல் பெரேரா, பியசேன கமகே, லசந்த சேனாநாயக்க, ஜயரத்ன ஹேரத், எம்.ஏ.சுமந்திரன், டக்ளஸ் தேவானந்தா, வேலுகுமார், மயில்வாகனம் உதயகுமார், மருதபாண்டி ராமேஸ்வரன், கோவிந்தம் கருணாகரன் ஆகியோரும் தோல்வி பட்டியலில் உள்ளடங்குவர்.

# அரசாங்கம் மீது...

மேலும் இவர் கூறியுள்ளதாவது, அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில், செயல்பட எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்மட்டத்திற்குக் கொண்டு வந்து நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த, மக்களுக்காக அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றச் செய்வதே எதிர்க்கட்சியின் முதன்மை பணியாகும்.

நாட்டை வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லவோ, நாட்டின் பொருளாதாரத்தை அழிக்கவோ, அல்லது குறுகிய அரசியல் நலன்களின் அடிப்படையில் செயல்படவோ ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் செயல்படாது. ஆனால், அரசாங்கம் தவறான பாதையில் செல்லும் போது, அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்போம். கடன்களைச் செலுத்தும் இயலுமையை அதிகரிப்பது, வருமான மூலங்களை அதிகரிப்பது, உற்பத்தியை அதிகரிப்பது, ஏற்றுமதியை அதிகரிப்பது, கல்வியை மேம்படுத்துவது, விவசாயத்தை மேம்படுத்துவது, பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் மீன்பிடித் தொழிலை மேம்படுத்துவது, சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது, வேலைவாய்ப்புப் பிரச்சினைக்கான தீர்வுகள் ஜனநாயகம் பாதுகாக்கப்படல் போன்ற விடயங்களில் மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

அவ்வாறே, ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த ஆணையை உரிய முறையில் அமுல்படுத்துவதற்காக கூட்டு அரசாங்கத்தை அமைப்பதற்குப் பதிலாகத் தனியொரு அரசாங்கத்தை அமைப்பதற்கான அதிகாரத்தை வழங்குமாறு ஜனாதிபதி மக்களிடம் கேட்டுக்கொண்டார். எனவே, தற்போதைய அரசாங்கத்திற்கு மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரத்தை வழங்கினர். தமக்குக் கிடைத்த கூடிய அதிகாரத்தை முறையாகச் செயல்படுத்தி மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்க அரச நடவடிக்கை எடுக்கும் என நம்புகிறோம்.

விமர்சனங்களுக்கு அப்பால் சென்று, பாராளுமன்ற குழுக்களில் பங்களித்து, வலதுசாரி முகாமின் கொள்கைகளை பாதுகாத்துக் கொண்டு, ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்த மக்களின் அபிலாஷைகளைப் பாதுகாத்து, பாராளுமன்றத்தில் அவர்களின் அபிலாஷைகளைப் பிரதிநிதித்துவப்படுத்திச் செயற்படுவோம் என்றார்.

# 25 இராணுவ...

பாதிக்கப்பட்ட இராணுவ வீரர்கள் குழுவொன்றை வைத்தியசாலையில் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் ஒருவர் சிகிச்சைக்காக ஐ.டி.எச். வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த முகாமில் இருக்கும் மேலும் 500 இராணுவ வீரர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் பிரதேச சுகாதார திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 11ஆம் திகதி முதல் குறித்த இராணுவ முகாமில் காய்ச்சல் பரவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "ஊழலை எதிர்க்க அனுரவுக்கு...

கடந்த பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகக் கடமையாற்றிய பிரேமதாச, எதிர்க்கட்சியை வழிநடத்திய அனுபவம் உள்ளவராகக் கருதப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், ஐக்கிய மக்கள் தேசியப் பட்டியல் இன்னும் இறுதி செய்யப்படவில்லை என்றும், கட்சியின் மத்திய குழு கூட்டத்தின் பின்னர் அது குறித்து முடிவு செய்யப்படும் என்றும் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், புதிய பாராளுமன்றத்தின் நடவடிக்கைகள் ஆரம்பமானதுடன், தொகுதி மற்றும் மாவட்ட ரீதியில் கட்சியை மறுசீரமைப்பதற்கான திட்டங்கள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கட்சியின் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இதேவேளை, கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, ஆளும் கட்சிக்குப் பெரும்பான்மை இருந்த போதிலும், பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க் கட்சியாக தமது கட்சியின் பங்கு குறித்து கருத்து வெளியிட்டிருந்தார்.

"மக்களின் வாக்குரிமை, ஜனநாயகம் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியானது பெறும் பொறுப்பைக் கொண்டுள்ளதுடன், எமது கடமைகளை நிறைவேற்றுவதற்கு நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம்" என மத்தும பண்டார கூறியுள்ளார்.

மேலும், "திருடப்பட்ட செல்வத்தைத் திரும்பக் கொண்டுவருவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஐக்கிய மக்கள் சக்தி முழுமையாக ஆதரவளிக்கிறது. ஊழலுக்கு எதிரான சட்டங்களை நாங்கள் ஏற்கெனவே பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளோம். அவற்றை அமல்படுத்தும் திறன் அரசாங்கத்துக்கு உள்ளது. இந்த சட்டங்களைத் தாமதமின்றி அமல்படுத்துமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறோம்.

இதேவேளை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பக்கீர் மார்க்கரும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டதுடன், "ஐக்கிய மக்கள் சக்தியானது எப்போதும் மக்களின் பிரச்சனைகள் மற்றும் சவால்களுக்குத் தீர்வுகளை வழங்குவதன் மூலம் மக்களுக்காக நிற்பதுடன், நாட்டிற்குத் தீங்கு விளைவிக்கும் முடிவுகளை நாங்கள் ஒருபோதும் எடுக்கவில்லை" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# லொஹான் தம்பதிக்கு...

இந்நிலையில், லொஹான் ரத்வத்தையை டிசம்பர் மாதம் 02 ஆம் திகதி வரையும் ஷஷி பிரபா ரத்வத்தையை நவம்பர் மாதம் 22ஆம் திகதி வரையும் மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

லொஹான் ரத்வத்தையின் மனைவி ஷஷி பிரபா ரத்வத்தைக்குச் சொந்தமான நுகேகொடை, மிரிஹான பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து பதிவுசெய்யப்பட்ட இலக்கத் தகடு இல்லாத சொகுசு கார் ஒன்று கடந்த ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி மிரிஹான பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தையும் அவரது மனைவியும் கைது செய்யப்பட்டு நுகேகொடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

# ரணில் எதிர்ப்பு

புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக கருணாநாயக்கவின் பெயர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக திங்கட்கிழமை (18) தகவல் வெளியான நிலையில்,புதிய ஜனநாயக முன்னணியின் பிரதிநிதிகளுக்கு ரணில் விக்ரமசிங்க இந்த விடயத்தைக் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், புதிய ஜனநாயக முன்னணி வகிக்கும் இரண்டு தேசியப்பட்டியல் எம்.பி பதவிகள் தொடர்பில் அந்த முன்னணியின் அனைத்துக் கட்சிகளும் இன்று செவ்வாய்க்கிழமை (19) காலை கொழும்பில் கூடி முடிவெடுக்கவுள்ளதாக ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்

இந்த நிலையில், ரவி கருணாநாயக்க ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் எனவும், அவர் கூட்டுத் தீர்மானமின்றி செயற்பட முடியாது எனவும் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

புதிய ஜனநாயக முன்னணியில் உள்ள அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளும் சந்தித்து இரண்டு தேசியப்பட்டியல் எம்.பி பதவிகள் தொடர்பில் உத்தியோகபூர்வ தீர்மானம் எடுக்கவுள்ள நிலையில், இவ்வாறான தன்னிச்சையான செயற்பாட்டை அங்கீகரிக்க முடியாது எனவும் ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

# தேசியப் பட்டியலில் ரவி

2024 பொதுத் தேர்தல் பெறுபேறுகளின் படி புதிய ஜனநாயக முன்னணி இரண்டு தேசிய பட்டியல் உறுப்பினர்களைப் பெற்றுக்கொண்ட நிலையில், அவர்களில் ஒருவராக இவரது பெயர் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், மற்ற தேசியப் பட்டியல் ஆசனம் குறித்து உரிய நேரத்தில் தேர்தல் ஆணைக் குழுவுக்கு அறிவிக்கப்படும் என்றும் அந்த தகவல்கள் குறிப்பிடுகின்றன.

பாராளுமன்றத் தேர்தலில் நாடளாவிய ரீதியில் மொத்தமாக 500,835 வாக்குகளைப் பெற்ற புதிய ஜனநாயக முன்னணிக்கு 2 தேசியப் பட்டியல் ஆசனங்கள் உட்பட மொத்தமாக 5 ஆசனங்கள் கிடைத்துள்ளன.

கண்டி மாவட்டத்தில் அனுராத ஜயரத்ன, களுத்துறை மாவட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன மற்றும் பதுளை மாவட்டத்தில் சாமர சம்பத் தசநாயக்க ஆகியோர் தேசிய ஜனநாயக முன்னணியின் சார்பில் 10ஆவது பாராளுமன்றத்துக்கு தெரிவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்னொரு தேர்தலுக்கு தயாராகும் ஆணைக்குழு

தற்போது, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பாக நீதிமன்ற உத்தரவும் வழங்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் கலந்துரையாடுவதே இந்த சந்திப்பின் முக்கிய நோக்கமாகும்.

இதேவேளை, எதிர்வரும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களுக்கான நிதித் தேவையைப் பாராளுமன்றத்தில் முன்வைக்கவுள்ள இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளடக்குவருதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்டம் டிசெம்பர் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

தேர்தலுக்குப் பணம் ஒதுக்கத் தீர்மானிக்கப்பட்டாலும், தேர்தல் திகதி குறித்து இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

அதன்படி, இந்த ஆணைக்குழு கூட்டத்தில் தேர்தல் திகதி குறித்து முடிவு எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இவ்வருட பொதுத்தேர்தலில் இதுவரை தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் பட்டியலை வழங்காத அரசியல் கட்சிகள் கூடிய விரைவில் அந்த பட்டியலைத் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# "சஜித்தின் வீழ்ச்சிக்கு பலவீனமே காரணம்"

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட சரத் பொன்சேகா, சஜித் பிரேமதாசவின் தலைமைத்துவத்தில் காணப்பட்ட பலவீனத்தின் காரணமாகவே தான் அக்கட்சியிலிருந்து விலகியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அதன் காரணமாகவே, மேலும் பல சிரேஷ்ட உறுப்பினர்களும் கட்சியை விட்டுச் சென்றதாகவும், அவர் வகித்த இரு பதவிகளிலும் திறமையான முறையில் செயற்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், உறுப்பினர்கள் விரும்பினால் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரா ஹர்ஷ டி சில்வாவை தெரிவு செய்ய வேண்டும் என்றும், சஜித் பிரேமதாசவின் தலைமைத்துவத்தின் கீழ், வலுவான எதிர்க்கட்சியாக செயற்பட முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

மாற்று வழி இல்லாமை காரணமாகவே தேசிய மக்கள் சக்தியை மக்கள் தெரிவு செய்துள்ளதாக கூறியுள்ள சரத் பொன்சேகா, ஜனாதிபதித் தேர்தலில் சிலிண்டருக்கு வாக்களித்தவர்கள்இம்முறை தேசிய மக்கள் சக்தியை தெரிவு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.



# ஒரு இலட்சம் தனியார் துறை ஊழியர்கள் வாக்களிக்கவில்லை

நாட்டில் நடைபெற்று முடிந்துள்ள பாராளுமன்றத் தேர்தலில் சுமார் ஒரு இலட்சம் தனியார் துறை ஊழியர்கள் வாக்களிக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டனர் என தேர்தல் கண்காணிப்பாளர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

விடுமுறை எடுக்க முடியாமல் அவர்கள் வாக்களிப்பதை தவிர்த்துள்ளதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகள் நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் 12 நிறுவனங்களின் ஊழியர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இதற்கான எதிரான நடவடிக்கைகள் குறித்து அவர் எந்த தகவலையும் வெளியிடவில்லை என கூறப்படுகிறது.

## வாழைக்குலை சம்பவத்தால் ஒருவர் கொலை

மாத்தளை, இரத்தோட்டை, நாகுலியத்த பிரதேசத்தில் பொல்லால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக இரத்தோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரத்தோட்டை, நாகுலியத்த பிரதேசத்தைச் சேர்ந்த பிள்ளைகளின் தந்தையான 46 வயதுடைய ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஆயிரம் ரூபாய் பெறுமதியான வாழைக்குலையைத் திருடிய சம்பவம் தொடர்பில் குறித்த நபருக்கும் அயல் வீட்டாருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம், எல்லை மீறியதால் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலை சம்பவம் தொடர்பில், வாழைக்குலையைத் திருடியதாகச் சந்தேகிக்கப்படும் அயல் வீட்டார் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இரத்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் பலி



வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில், பொத்துவிலை அடுத்துள்ள கோமாரிப் பிரதேசத்தில் காட்டு யானை தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் திங்கட்கிழமை (18) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான 46 வயதுடைய ஜெயரட்ணம் நவநேசன் வயல் காவலுக்குச் சென்ற போதே இந்த அனர்த்தம் ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் பிரேதப் பரிசோதனைக்காக பொத்துவில் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## முச்சக்கர வண்டியில் பயணித்த கருநாகம்



ரீ.எல்.ஜவ்பர்கான்

முச்சக்கர வண்டியின் டயஸ் போட்டிற்குள் மறைந்திருந்த விஷம் நிறைந்த கருநாகம் பாம்பு, வாகனம் திருத்துநரின் உதவியுடன் வெளியே எடுக்கப்பட்டது.

வாழைச்சேனையில் இருந்து மட்டக்களப்பு நோக்கி ஞாயிற்றுக்கிழமை (17) அன்று சிறுவர்கள் உட்பட பயணிகளை ஏற்றிச் சென்றபோது பயணத்தின் இடையில் மட்டக்களப்பு - கொழும்பு வீதியில் மயிலம்பாவெளி எனுமிடத்தில் வைத்து பாம்பை அவதானித்த சாரதி, முச்சக்கர வண்டியை நிறுத்திவிட்டு வாகனம் திருத்துனரை வரவழைத்து வண்டியின் முன் பகுதியைக் கழட்டி பாம்பை வெளியே எடுத்துக் காட்டுக்குள் அனுப்பி வைத்துள்ளார்.

கவனயீனமாக சாரதி இருந்திருந்தால் சாரதியை விஷப் பாம்பு தீண்டியிருக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## சிறுமியின் வரலாற்று சாதனை

திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி மற்றும் Trinco Chess Academy ஐ சேர்ந்த ஜெகதீசன் மற்றும் ஷோபனா ஆகியோரின் புதல்வி நிவாஷ்னி, 2023/24 தேசிய இளம் வீரர்கள் சதுரங்க சாம்பியன்ஷிப் (National Youth Chess Championship) போட்டியில் சுமார் 425 போட்டியாளர்களுடன் போட்டியிட்டு 29ஆவது இடத்தைப் பெற்று மெரிட் தரத்தைப் பெற்றுள்ளார்.

இது சதுரங்க வரலாற்றில் ஒரு முக்கிய சாதனையாகும். இந்த போட்டி 2023 December 27 முதல் 30 வரை பன்னிப்பிட்டிய தர்மபால வித்தியாலயத்தில் நடைபெற்றது. 9 சுற்று சுவிஸ் முறையில் நடந்த இப்போட்டியை ஸ்ரீலங்கா சதுரங்க சம்மேளனம் (Chess Federation of Sri Lanka) ஒழுங்கு செய்தது. இதனை தொடர்ந்து, நிவாஷ்னி, 2024ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற சர்வதேச போட்டியான ,பொதுநலவாய இளம் வீரர்கள் சதுரங்க விளையாட்டுகளில்




(Commonw e alth Youth Chess Championship 2024 - Under 10 Girls) classic, Rapid, Blitz சதுரங்க போட்டி வகைகளில் பங்கேற்று, சர்வதேச சதுரங்க போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்திய முதல் திருகோணமலை வீராங்கனையாகியுள்ளார்.

இந்தப் போட்டி, August 28 முதல் September 5, 2024 வரை வாஸ்கடுவா Citrus Hotel-இல் நடைபெற்றது. இதை இலங்கை சதுரங்க சம்மேளனம் (Chess Federation of Sri Lanka), Commonwealth Chess Association (CCA) மற்றும் FIDE சார்பில் நடத்தியது.

இந்த சாதனையின் மூலம் நிவாஷ்ணி, திருகோணமலை மண்ணுக்கும், அவரது பாடசாலைக்கும், அவருக்கு அடிப்படையில் இருந்து சதுரங்கத்தை பயிற்றுவித்த Trinco Chess Academy க்கும் பெருமை சேர்த்துள்ளார்.



## 25ஆம் ஆண்டு நினைவேந்தல்

எஸ்.தில்லைநாதன்

ஹாட்லியின் மைந்தர்களது 25ஆம் ஆண்டு நினைவு நாள் வடமராட்சி இன்பர்சிட்டி கடற்கரையில் ஞாயிற்றுக்கிழமை (17) உணர்வுப்பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது, உயிரிழந்த மாணவர்களது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஹாட்லிக் கல்லூரி அதிபர் த.கலைச்செல்வன் உள்ளிட்ட பலர் பங்கேற்று அஞ்சலி செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# அரசியலில் மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டுள்ளதா?

பொதுத் தேர்தல் நிறைவடைந்து, தேசிய மக்கள் சக்தி சாதனை மிகுந்த வெற்றியீட்டி, புதிய அமைச்சரவையையும் நியமித்துள்ளது. ஆனாலும், இம்முறை தேர்தலில் பெருமளவான மக்கள் தமது வாக்குகளை செலுத்தாதையும், செலுத்தப்பட்ட வாக்குகளில் செல்லுபடியற்ற வாக்குகள் பல காணப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது.

உண்மையில் இந்த உயர்ந்த எண்ணிக்கையிலான நிராகரிக்கப்பட்ட வாக்குகள் மற்றும் வாக்களிக்க மக்கள் செல்லாமை ஆகியவற்றுக்கும் அரசியலில் மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டிருக்கும் என்பதற்கும் இடையே தொடர்பு காணப்படலாம்.

கடந்த 2020ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் இதுபோன்றதொரு வெற்றியை அன்றைய மொட்டுக் கட்சி பெற்றுக் கொண்டது. பதவியேற்று இரண்டு வருடங்களினுள் அந்த ஆட்சி ஆட்டம் கண்டது. மக்கள் பெரும் துயரங்களை அனுபவித்தனர். இதன் தாக்கம் தற்போதும் தொடர்கின்றதா எனும் அனுமானத்துக்கு அப்பால், நாட்டின் பாரம்பரியமாக சில பிரதான காட்சிகள் ஆட்சி செய்துள்ளன. மக்கள் அறிந்த சில கட்சிகளாக ஐக்கிய தேசிய கட்சி, சுதந்திரக் கட்சி போன்ற முக்கிய கட்சிகள் இம்முறை தேர்தலில் போட்டியிடவில்லை. மாறாக அவை வெவ்வேறு பிரிவுகளாகப் பிரிந்து, வேறு பெயர்களில், வேறு சின்னங்களில் போட்டியிட்டிருந்தன.

இவை தொடர்பில் பொது மக்களுக்கு போதிய விழிப்புணர்வு இன்மை, தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு போதிய கால அவகாசம் இன்மை போன்றனவும் இம்முறை தேர்தலில் பெருமளவு மக்கள் வாக்களிக்காமைக்குக் காரணமாக அமைந்திருக்கும்.

அத்துடன், பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் பலர், நாட்டின் நெருக்கடி நிலையைத் தொடர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர். ஆனாலும், இன்னமும் அவர்களின் பெயர்கள் தேர்தல் இடாப்பில் காணப்படுகின்றன. இந்தக் காரணியும் குறைந்த வாக்காளர் வாக்களிப்பில் தாக்கம் செலுத்தியிருந்தன.

நிராகரிக்கப்பட்ட வாக்குகளும் அதிகரித்து காணப்பட்டமையில், மக்கள் வேண்டுமென்றே தமது வாக்கைத் தவறான முறையில் பதிவிட்டிருக்கலாம் அல்லது எவ்வாறு வாக்களிப்பது என்பது தொடர்பான போதியளவு தெளிவுபடுத்தல் அவர்களுக்கு வழங்கப்படாமல் இருந்திருக்கலாம்.

எவ்வாறாயினும், தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அமோக வெற்றியீட்டி, இதர துணைக் கட்சிகளின் ஆதரவு இன்றி, தனித்து ஆட்சி பீடம் ஏறியுள்ளது. மேலே குறிப்பிட்டதைப் போன்று, கடந்த கால அரசியல்வாதிகளின் செயற்பாடுகளினால் பொது மக்களுக்கு அரசியலில் ஒருவித வெறுப்பு ஏற்பட்டிருக்குமாயின், அதனைச் சரி செய்ய வேண்டிய பாரிய பொறுப்பு, மக்களுக்கு மீண்டும் அரசியல் கட்டமைப்பின் மீது நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டிய கடப்பாடு அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கத்துக்குக் காணப்படுகின்றது. உறுதியான அரசியல் ஆணை கிடைத்துள்ளதைச் சரியான வழியில் பயன்படுத்த வேண்டியது புதிய அரசின் கடமையானும்.


தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

தவறுகளைத் தொடர்ந்தும் செய்வேன் என கங்கணம் கட்டுபவர்கள், தங்களைத் தாங்களே சித்திரவதைக்குள்ளாக்கி அழிந்தே போய் விடுவார்கள். பலகோடி மக்கள் வாழும் பூமி இது.

ஆனால், இத்தகையவர்களின் செயல்களால், மக்கள் படும் அவஸ்தைகள் சொல்லில் அடங்காது. கல்லூரிகள் வழிபாட்டு ஸ்தலங்கள், மக்கள் கூடும் இடங்களில் பயங்கரவாத நடவடிக்கைகள் நடக்கும் போதும் ஏற்படும் இழப்புக்கள் ஏராளம், ஏராளம்.

இவற்றைத் தவிர்க்க முடியாது நாடுகள் கலங்குகின்றன. அமைதி பலருக்கும் பிடிப்பதில்லை. கொலைஞர்கள் தங்களைப் போன்றவர்களை உருவாக்குவதில் தீவிரமாக இருக்கின்றனர்.

இவர்களில் தீவிரவாதம் எது, நற்செயல் எதுவெனத் தெரியவே தெரியாது வாழ்கின்றனர். தாய், தந்தை, சகோதரர், உற்றம் சுற்றமுடன் இணைந்தவர்கள் கூட இரக்கமின்றி விஷம் சுரக்க எப்படி உருவாகினார்கள்?

அகண்ட பூமியில் அடங்காத மனிதர் இவர்கள், அன்பு, நேயம், இரக்க இன்மையால் பூமிக்குத் துன்பம் இருந்தபடியே உள்ளது. காலம் மாறும் பார்ப்போம்.

நன்றி-பருத்தியூர் பால.வைரவநாதன்

# சிறுபான்மை சமூகங்களின் அரசியல் சார்பு நிலையில் ஏற்படும் மாற்றம்

மொஹமட் பாதுஷா

பொதுத் தேர்தல் முடிவுகள் தேசிய மக்கள் சக்திக்கு இன்னுமொரு வெற்றியைக் கொடுத்திருப்பதுடன், இலங்கை அரசியல் கலாசாரத்திற்கு ஒரு பாடமாகவும் அமைந்திருக்கின்றது. மூன்றுபேர் எம்.பிக்களாக இருந்து கொண்டு ஜனாதிபதித் தேர்தலை வெல்வதும், அதே மூன்று பேர் அமைச்சர்களாக இருந்தவாறு அறுதிப் பெரும்பான்மையுடன் வெல்வதும் சாதாரணமான அடைவல்ல.

கடந்தகால ஆட்சியாளர்களினால் மக்களுக்கு ஏற்பட்டிருந்த வெறுப்பு, ஜனாதிபதித் தேர்தலில் அனுரகுமார திசாநாயக்கவின் வெற்றிக்கும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களால் பிரதேச வாரியாக மக்களுக்கு உருவாகியிருந்த நாட்பட்ட கோபம் பொதுத் தேர்தலில் 146 புதுமுகங்கள் தெரிவு செய்யப்படுவதற்கும் என்.பி.பி. 159 ஆசனங்களுடன் வெல்வதற்கும் முதலீடாக ஆகியிருக்கின்றது எனலாம்.

இலங்கை அரசியலில் பெரும்பான்மைப் பலம் பெறப்படுவது இது முதற் தடவையல்ல. ஆறில் ஐந்து பலம் பெற்ற ஆட்சியாளரையும் கண்டுள்ளோம். ஆனால், இம்முறை சிறுபான்மை முஸ்லிம்களும் தமிழர்களும் கணிசமான வாக்குகளைப் பெரும்பான்மைக் கட்சிக்கு வழங்கியிருக்கின்றமையும், அதனை ஆளும் கட்சி பெறுமதி மிக்கதாக கருதுகின்றமையுமே மிக முக்கியமானது.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் பொதுத் தேர்தலோ பொதுத் தேர்தலுக்கு உடனடுத்ததாக ஜனாதிபதித் தேர்தலோ இடம்பெறுகின்றபோது, முதலாவது தேர்தலில் வெற்றி பெற்ற கட்சிதான் அடுத்த தேர்தலிலும் வெற்றி பெறும். அந்த வகையில் சிங்கள மக்கள் என்.பி.பிக.கு அணிதிரண்டு வாக்களித்திருக்கின்றமை ஆச்சரியமானதல்ல.

ஆனால், வட மாகாணத்தின் இரு தேர்தல் மாவட்டங்களிலும் வரலாற்றில் முதற் தடவையாகத் தென்னிலங்கைக் கட்சி ஒன்று வெற்றி பெற்றுள்ளது. இது தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கு ஒரு அடியாகும். மறுபுறத்தில் இந்த மக்கள் ஆதரவையே என்.பி.பி. பெருவெற்றியாகக் கணிக்கின்றது. தமிழ் மக்கள் தமது மாமூல் அரசியல் சிந்தனைகளிலிருந்து விடுபட்டு, தம்மை நோக்கி வந்துள்ளதாகக் கருதுகின்றனர்.

சமகாலத்தில், கிழக்கு மாகாணத்திலும் வடக்கின் பல பகுதிகளிலும் கணிசமான முஸ்லிம்கள் என்.பி.பி.க்கு வாக்களித்துள்ளனர். மட்டக்களப்பு தவிர்ந்த மற்றைய இரு மாவட்டங்களிலும் அக் கட்சியே வெற்றி பெற்றிருக்கின்றது.

குறிப்பாக திகாமடுல்ல (அம்பாறை) மாவட்டத்தில் சிங்கள மக்களின் வாக்குகளை விட முஸ்லிம்களும் தமிழர்களும் அதிகமான வாக்குகளை என்.பி.பி.க்கு வழங்கியிருக்கின்றனர். இதனால் 4 ஆனசங்கள் சிங்களவர்களுக்குக் கிடைத்துள்ளன. துரதிர்ஷ்டவசமாக ஒரு முஸ்லிம் எம்.பி. கூட நேரடியாக தெரிவு செய்யப்படவில்லை.

இது ஒருவித சலசலப்பை ஏற்படுத்தியிருந்த பின்னணியில், நிலைமைகளை நாடி பிடித்து அறிந்த ஜனாதிபதி அனுர குமார, தனது கட்சியின் முன்னைய நிலைப்பாடுகளில் சில மாற்றத்தைக் கொண்டு வந்து, அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தோல்வியுற்ற வேட்பாளரான ஏ.ஆதம்பாவாவை தேசியப் பட்டியல் எம்.பியாக அறிவித்துள்ளார்.

வடக்கின் வாக்குகள் கிடைக்கக் காரணமாக இருந்தார் என நம்பப்படும் ஆர். சுந்திரகேசரனுக்கும், திகாமடுல்லையில் ஒருவருக்கும் தேசியப்பட்டியலில் இடம் வழங்கப்பட்டுள்ளமை அரசாங்கத்தின் சிறுபான்மைச் சமூகங்களை நோக்கிய நல்லதொரு சமிக்கையாகும்.

சிறுபான்மைச் சமூகங்களின் அரசியல் சிந்தனையில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்தை ஜனாதிபதியும் அக்கட்சியின் முக்கியஸ்தர்களும் முக்கியமானதாகக் கருதுகின்றனர். குறிப்பாக, தமிழ் மக்கள் அரசாங்கங்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வந்த நிலையில், இப்போது தென்னிலங்கை கட்சிக்கே வாக்களித்துள்ளமை அரசிற்குச் சர்வதேச அரங்கில் பெரும் பலமாக அமையும்.

அதேபோல், முஸ்லிம்களும் மலையக மக்களும் கணிசமான வாக்குகளை என்.பிக்கு வழங்கி இருக்கின்றமை, மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை உறுதி செய்வதற்கு அப்பால், அனைத்து இன, பிராந்திய மக்களினதும் ஆதரவைப் பெற்ற அரசாங்கம் என்ற தோற்றப்பாட்டைக் கட்டமைப்பதற்கு என்.பி.பிக்கு உதவியிருக்கின்றது.

ஆனால், இங்கு ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டியுள்ளது. பெரும்பான்மையான தமிழ் மக்கள் என்.பி.பிக்கு வாக்களிக்க, மட்டக்களப்பு தமிழர்கள் தமிழரசுக் கட்சிக்கு முன்னுரிமை கொடுத்திருக்கின்றார்கள்.

அவ்வாறே, திகாமடுல்ல மாவட்டத்தில் சுமார் வாக்குகளை முஸ்லிம்கள் என்.பி.பிக்கு அளித்துள்ள சமகாலத்தில் சுமார் 80 ஆயிரம் வாக்குகளை அளித்து முஸ்லிம் கட்சிகள் ஊடாக இரு எம்.பிக்களை பெற்றிருக்கின்றார்கள்.

அத்துடன், மட்டக்களப்பு, திகாமல்லையில் முஸ்லிம் காங்கிரஸிற்கு அளித்த வாக்குகள் ஒரு தேசியப் பட்டியலையும் பெற்றுத் தந்திருக்கின்றது.

இம்முறை திகாமடுல்லயில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட புதிய ஜனநாயக முன்னணியின் முஸ்லிம் வேட்பாளர்களுக்கும் முஸ்லிம்கள் சுமார் 30 ஆயிரம் வாக்குகளை அளித்துள்ளனர். இருப்பினும், 88 வாக்குகளால் அக்கட்சி ஒரு ஆசனத்தை இழந்துள்ளது. இதனால், கிழக்கு அரசியலின் தவிர்க்க முடியாத அரசியல் தலைவராக இருந்த முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தோல்வியடைந்துள்ளார்.

எவ்வாறிருப்பினும், குறிப்பாக அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் தங்களுக்கு முஸ்லிம் கட்சிகளும் தேவை என்பதில் இன்னும் தெளிவாக இருக்கின்றனர் என்பதை இது குறிப்புணர்த்துகின்றது. இது முக்கியமான விடயமாகும். ஆனால், முஸ்லிம் கட்சிகளின் வாக்குகள் வீழ்ச்சிடைந்துள்ளமையும், தமிழர்களைப் போலவே முஸ்லிம்களின் அரசியல் சார்புநிலை என்.பி.பியை நோக்கி நகர்ந்துள்ளதையும் மறுக்கவே முடியாது. இது சிறுபான்மை தலைவர்களுக்குப் பாடமாகும்.

இவ்வளவு காலமும் தனித்துவ அடையாள முஸ்லிம் கட்சிகளும், இனத்துவ அரசியல்வாதிகளும் முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவில்லை. ஒன்றிரண்டு பேரைத் தவிர மற்ற எல்லோரும் தமது எம்.பி. பதவியை சமூக நலனுக்காகப் பயன்படுத்தவில்லை. அதற்காக அவர்களுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும். அதனைக் கிழக்கு முஸ்லிம்கள் செய்துள்ளார்கள்.

ஆனால், சம்பந்தப்பட்ட தலைவர்கள், முன்னாள் எம்.பிக்கள் கூடாது என்பதற்காக, முற்று முழுதாக முஸ்லிம்களுக்கான பிரத்தியேக அரசியலை இல்லாதொழித்துவிட முடியாது என்பதையும் புரிந்து கொண்டுள்ளதாகவே தெரிகின்றது. நமக்கு ஒரு ஆபத்துக்கு உதவுவதற்கான முஸ்லிம் கட்சிகளைச் சீரமைத்துத் தக்க வைத்திருக்க வேண்டிய தேவையும் உள்ளது.

கடந்த காலத்தில் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்ற கட்சிகள் மக்களுக்கு நல்லது செய்ததை விட தமது அதிகார வெறிக்காகவே அவற்றைப் பயன்படுத்தின. குறிப்பாக முஸ்லிம்களும் தமிழர்களும் பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தியும் நசுக்கப்பட்டனர். நிறைவேற்று அதிகாரம் கூட பல சந்தர்ப்பங்களில் முஸ்லிம்களுக்குக் கைகொடுக்கவில்லை என்பதே கசப்பான அனுபவமாகும்.

ஆனால், இந்த அனுபவங்கள், கடந்தகால சம்பவங்களை எல்லாம் மீறி மக்கள் இந்தளவுக்குத் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்திருக்கின்றார்கள் என்றால், அதற்கு அக்கட்சியின் பரப்புரைகளும், தமிழ், முஸ்லிம் கட்சிகளில் அம்மக்களுக்கு ஏற்பட்டுள்ள வெறுப்பும் மட்டுமே காரணமல்ல.

மாறாக, அனுரகுமார திசாநாயக்க என்ற மக்களை ஆகர்ஷிக்கும் அரசியல்வாதி மீது சிறுபான்மை மக்கள் வைத்துள்ள நம்பிக்கையாகும். ஜனாதிபதியும், முற்போக்கு சிந்தனையுள்ள பிரதமர் ஹரிணி மற்றும் அமைச்சர் விஜித ஹேரத் போன்றவர்கள் முஸ்லிம்களையும் தமிழர்களையும் சரிசமமாகக் கவனிப்பார்கள் என்று திடமாக நம்புகின்றார்கள்.

அதேநேரம், மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுள்ள என்.பி.பியின் கொள்கைகளை ஜே.வி.பியின் பழங்கால அடிப்படைக் கொள்கைகள் எவ்விடத்திலாவது மேவி விடுமோ என்ற எண்ணமும் சிறுபான்மை மக்களின் மனங்களில் எங்கோ ஓர் மூலையில் இருக்கவே செய்கின்றது என்பதை அரசாங்கம் மறந்து விடக்கூடாது.

இலங்கைச் சூழலில், என்னதான் அமைதி நிலவினாலும் இன ஐக்கியம் பற்றிப் பேசினாலும் இனவாத அரசியல்வாதிகளும் இனவாத குழுக்களும் அழிந்து விட்டன என சொல்ல முடியாது. நீண்டகாலத்தில் என்ன குழப்பங்களை ஏற்படுத்துவார்கள் என்று இப்போது கூற முடியாது.

முஸ்லிம்களும். தமிழர்களும் வழக்கத்திற்கு மாறாகப் பேராதரவு வழங்கியுள்ளமை வரலாற்றுச் சாதனையாகும். அதனை அனுரகுமார திசாநாயக்க அரசாங்கம் உயர்வாக மதிக்கின்றமை ஆறுதலளிப்பதாக உள்ளது. இந்த உறவு எப்போதும் நீடிக்க வேண்டும்.

மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தை வைத்துக் கொண்டு முன்னைய அரசாங்கங்கள் போல தலைகால் தெரியாமல் ஆடாதிருப்பதுடன், சிறுபான்மை முஸ்லிம்களையும் தமிழர்களையும் மலையக மக்களையும் சிங்கள மக்களுக்குச் சரி சமமாக நடத்துதல் உள்ளடங்கலாகப் பல காரியங்களைச் செய்ய வேண்டியுள்ளது.

உண்மையில், இலங்கையில் பெரும்பான்மை மக்களையும் சிறுபான்மை மக்களையும் ஒரே நேரத்தில் திருப்திப்படுத்துவது அவ்வளவு இலேசான காரியமல்ல. ஆனால், அனுரகுமார அரசு அதனைச் செய்ய வேண்டிய கடப்பாட்டைச் சுமந்துள்ளது.

## கடிதங்கள்

### கட்டாக்காலி மாடுகளால் தொல்லை

மட்டக்களப்பு- காத்தான்குடி நகர சபை பிரிவில் வீதிகளில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் காரணமாகப் பொதுமக்களும் வாகன சாரதிகளும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர் .

கடைத்தெருக்கள் மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகம் நிறைந்த பிரதான வீதிகளில் அதிக அளவிலான கட்டாக்காலி மாடுகள் வீதியின் நடுவே கூட்டம் கூட்டமாகச் செல்வதனால் வாகன சாரதிகள் வாகனங்களைச் செலுத்த முடியாமல் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர்

குறித்த கட்டாக்காலி மாடுகள் பகல் நேரங்களிலும் வேலைப்பளு மிக்க நேரங்களிலும் வீதிகளில் அதிக அளவில் நடமாடுவதை அவதானிக்க முடிகின்றது


இதனால் வாகன விபத்துகளும் சம்பவிப்பதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கமைய, கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

- றீ.எல்.ஜவ்பர்கான்



# இணைய குற்றங்களில் சிக்கி விடாமல் பாதுகாப்பாக இருப்பது எப்படி?



ஜே.மங்களதர்ஷினி,
இரண்டாம் வருடம்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

"எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்"

பின்னர் வரப்போவதை முன்னதாகவே அறிந்து காக்கும் அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும் படியாக வருவதான ஒரு துன்பமும் இல்லை. இணையத்தளங்களில் நாம் செலவழிக்கும் நேரம் அதிகரித்து வருவதால், பாதுகாப்பு என்பது மிக முக்கியமான பிரச்சினையாகியுள்ளது. இணையம் மூலம் நடத்தப்படும் துன்புறுத்தல், கொடுமைப்படுத்தல், அவமானப்படுத்தல், அச்சுறுத்தல்கள், ஓரம் காட்டுதல், பாகுபாடு காட்டுதல், வற்புறுத்துதல், உணர்ச்சி, மன, உடல் மற்றும் ஆன்மீகம் என்ற அடிப்படையில் வலியை ஏற்படுத்துகின்ற எந்த வடிவமும் இணையவழிக் குற்றமாகும்.

இணையத்தின் வேகமான வளர்ச்சியால் உலகம் முழுவதும் இணையக் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. இது தனி நபர்கள், நிறுவனம், அரசாங்கம் ஆகிய அனைத்திற்கும் பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. இணையத்தின் வளர்ச்சி, தொழில்நுட்ப பயன்பாடு, மற்றும் இணையத்தளப் பயன்பாடு ஆகியவை உயர்வைச் சந்திக்கும் நிலையில், சைபர் பாதுகாப்பு நிறுவனங்களின் ஆய்வுகளின் அடிப்படையில், 2024ஆம் ஆண்டுக்குள் உலகளவில் ஒவ்வொரு 10 விநாடிகளுக்கும் ஒரு Ransomware தாக்குதல் (கணினியில் இருக்கும் கோப்புகளை மறையாக்கம் செய்து பணத்தைக் கேட்டு மிரட்டும் மென் நிரல்) நிகழ்ந்துள்ளது என தெரிய வருகிறது.

இலங்கையில் இணைய வழி குற்றங்கள் ஆபத்தான அளவில் அதிகரித்து வருகின்றன. இணையத்திற்கான அணுகுமுறை விரிவடைந்து, இணையம் நம் வாழ்வின் அங்கமாக மாறியுள்ள நிலையில், குற்றவாளிகளும் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நிதி திருட்டுக்கள், தனியுரிமை மீறல்கள், மிரட்டல்கள் போன்ற குற்றங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வருடம் ஆகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களுக்கு இடையில் இணையக் குற்றச் செயல்கள் தொடர்பான 9,000 க்கும் மேற்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழு (SLCERT) தெரிவித்துள்ளது. 80 சதவீதமான முறைப்பாடுகள் சமூக ஊடகங்களுடன் தொடர்புடையவை ஆகும். அதன்படி, இணையவழி மோசடி தொடர்பில் 1,400 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. சிறுவர்களை இலக்கு வைத்து ஒன்லைனில் பாலியல் வன்கொடுமைகள் தொடர்பாக 20% வழக்குகள் குறிப்பாக சைபர் கிரைம் தொடர்பானவை என்று அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. இந்நிலையில், 85 முறைப்பாடுகள் சிறுவர்கள் மீதான இணைய அச்சுறுத்தல்களுடன் தொடர்புடையவை என்பதுடன், 40 முறைப்பாடுகள் பாலியல் துஷ்பிரயோகங்களுடன் தொடர்புடையவை ஆகும்.

இலங்கையில் பலவகையான இணையக் குற்றங்கள் நிகழ்ந்துள்ளன. பயனர்களுக்கு ஃபிஷிங் மென்பொருள் (phishing software), போலி இணைப்புகள் அல்லது மோசடி செய்திகளை அனுப்புவதன் மூலம் இலங்கையின் வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்களிடமிருந்து வெளிநாட்டுக் கணக்குகளுக்குப் பணத்தை மாற்றும் மோசடிகளைச் சீனா, மலேசியா மற்றும் இந்தியா போன்ற நாடுகளைச் சேர்ந்த குற்றவாளிகள் மேற்கொண்டு வருகின்றனர். தொலைபேசி எண், அட்டை எண் போன்ற பின் குறியீடுகள் திருட்டு அதிகரித்துள்ளது. முக்கியமாக, பலர் இணையவழி பரிமாற்றங்களின் போது ஃபிஷிங் (Phishing) தாக்குதல்களில் சிக்குகிறார்கள்.

இலங்கையில் இணையக் குற்றங்கள் பெரும்பாலும் நிதி சம்பந்தமான மோசடிகள், குறிப்பாக ஃபிஷிங் தாக்குதல்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக, போலியான மின்னஞ்சல்கள் மற்றும் வலைத்தளங்கள் மூலம் பயனாளிகளின் நிதி விபரங்கள் திருடப்படுகின்றன. 2023 முதல் 2024 வரை SLCERT அமைப்பிற்கு மாதம் 9,000 முறைப்பாடுகள் வந்துள்ளன. இதனில் பெரும்பாலானவை ஃபிஷிங் மோசடிகள் மற்றும் நிதி திருட்டுக்களுடன் தொடர்புடையவை.

சமூக ஊடகங்களில் சைபர் மிரட்டல் மற்றும் அவமதிப்பு தொடர்பான குற்றங்களும் அதிகரித்து வருகின்றன. இவை பெரும்பாலும் இளைய தலைமுறையைப் பாதிக்கின்றன. 2024ஆம் ஆண்டு இலங்கையில் சைபர் மிரட்டல் தொடர்பாக சுமார் 1,500 வழக்குகள் பதிவாகியுள்ளன. இந்த குற்றங்கள், தனிநபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் மிகுந்த நிதி இழப்பு, மனஅழுத்தம்மற்றும்மனநிலை பாதிப்பு போன்ற பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றன.

இலங்கை அரசாங்கம் இணையக் குற்றங்களைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 2024ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 'ஒன்லைன் பாதுகாப்பு சட்டம்' (Online Safety Act) அதன் முக்கிய பங்குகளில் ஒன்றாகும். இந்தச் சட்டத்தின் மூலம் ஒன்லைன் துஷ்பிரயோகங்கள், கணக்கு மோசடிகள் மற்றும் போலிக் கணக்குகளின் மூலமாக ஏற்படும் குற்றங்களைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், இந்த சட்டத்தின் கீழ் உள்ள ஒன்லைன் பாதுகாப்புக் குழுமம் (Online Safety Commission) இணையத்தளங்களில் பிரச்சினைகளைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க இயலும். இலங்கை அரசு சைபர் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காகச் சீனா போன்ற நாடுகளின் உதவியுடன் தொழில்நுட்ப உதவிகளையும், இணைந்து செயல்படும் திட்டங்களையும் மேற்கொண்டுள்ளது. இது அரசாங்கத்திற்கும் தனியார்த் துறைக்கும் இடையே தகவல் பகிர்வதற்கான ஒரு பலமான பிணைப்பை உருவாக்க உதவுகிறது.

இணையக் குற்றங்களைத் தடுக்க மக்கள் சில முக்கிய முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்வது அவசியம். ஒவ்வொரு கணக்குக்கும் வெவ்வேறு கடவுச்சொற்களை (Password) அமைத்துக் கொள்ளவேண்டும். கடவுச்சொற்களை வலுப்படுத்தி, அவற்றை அடிக்கடி மாற்ற வேண்டும். அத்துடன் ஏற்கனவே உபயோகப்படுத்தியவற்றைப் பயன்படுத்தாமல் இருக்க வேண்டும். கணக்குகளில் கூடுதல் பாதுகாப்பு இருக்க வேண்டும் என்பதற்காக இரண்டு அடுக்கு பாதுகாப்பை (Two-Factor Authentication - 2FA) செயல்படுத்துதல். இது கடவுச்சொல்லுக்கு மேல் மேலும் ஒரு அங்கீகார முறையைத் தருகிறது, அதில் உங்கள் மொபைலில் கிடைக்கும் OTP போன்ற ஒரு கூடுதல் அடுக்கு இருக்கும். அனுமதியில்லா இணைப்புகள் அல்லது சந்தேகமான மின்னஞ்சல்களில் உள்ள இணைப்புகளைத் திறக்க வேண்டாம். முக்கியமாக, நிதி நிறுவனங்கள், அரச துறைகள், மற்றும் உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பெற முயல்கின்ற ஆவணங்கள் தொடர்பாக வரும் மின்னஞ்சல்களும் எச்சரிக்கையாகப் பார்க்கப்பட வேண்டும்.

வங்கிக் கணக்குகள் அல்லது தனிப்பட்ட தகவல்களைச் சரிபார்க்கும்போது, நம்பகமான தளங்களுக்குச் சென்று உங்கள் browser மூலம் நேரடியாக உள்நுழைக. உங்கள் வங்கிக் கணக்குகளின் மீதான பரிவர்த்தனைகளை அவ்வப்போது சரிபார்த்துக் கொண்டால் சந்தேகத்திற்குரிய எதையும் உடனடியாகக் கண்டுபிடிக்க முடியும். சிறிய மாற்றங்களுக்காகப் பின்னர் நட்டமடைவதைத் தடுக்க முடியும்.

இணையம் மூலம் வரும் வைரஸ்கள் மற்றும் சைபர் தாக்குதல்களைத் தடுக்க, மறைமுகமாகபுதுப்பிக்கச் (update) செய்யும் பாதுகாப்பு மென்பொருள்களை (அன்டிவைரஸ்) நிறுவவும். தொலைபேசி செயலிகள் மற்றும் மென்பொருள்களை Play Store, App Store போன்ற அதிகாரப்பூர்வ தளங்களிலிருந்து மட்டுமே பதிவிறக்குதல். மற்ற தளங்களிலிருந்து பதிவிறக்கப்படும் செயலிகள் பெரும்பாலும் வைரஸ்கள் மற்றும் பாதுகாப்பு ஆபத்துக்களை ஏற்படுத்தக் கூடும்.

தனிப்பட்ட தகவல்களைப் பகிர்வது குறைவாக இருக்க வேண்டும். குறிப்பாக, பாதுகாப்பற்ற அல்லது பொது Wi-Fi மூலம் முக்கியமான தகவல்களை மாற்ற வேண்டாம். தனிப்பட்ட Wi-Fi அமைப்புகள் பாதுகாப்பானவை. பாதுகாப்பற்ற இணையங்கள் மற்றும் Wi-Fi மூலம் பயன்படுத்தப்படும் தகவல்களைக் குற்றவாளிகள் சுலபமாகக் கண்டுபிடிக்க முடியும். உங்கள் தொலைபேசி எண், அட்டை எண்கள், OTP ஆகியவற்றை எவருடனும் பகிர வேண்டாம். சமூக ஊடக கணக்குகளில் தனிப்பட்ட தகவல்கள் (உங்கள் குடும்ப விபரங்கள், பிறந்த திகதி, இருப்பிடம்) பகிர்வதைக் குறைத்துக்கொள்ளவேண்டும். இந்த தகவல்கள் குற்றவாளிகளால் பயனாளரின் அடையாளத்தைத் திருடும் வகையில் பயன்படுத்தப்படலாம்.

சந்தேகத்திற்குரிய இணையத்தளங்களில் இணைய வேண்டாம். இணையத்தளத்தின்URL சரிபார்க்கவேண்டும். சட்ட முறை இணையத்தளங்கள் https:// உடன் தொடங்கும். பாதுகாப்பற்ற தளங்களில் உங்கள் தகவல்களைப் பதிவேற்ற வேண்டாம். இணையத்தில் புதிய தந்திரங்களைப் பயன்படுத்தி குற்றவாளிகள் செயல்படும் சூழ்நிலைகளும், புதிய பாதுகாப்பு சவால்களும் நாளுக்கு நாள் உருவாகின்றன. சைபர் பாதுகாப்பு தொடர்பான தகவல்களைப் பரவலாக அறிந்து கொள்ளவேண்டும். இணையத்தில் பயன்படும் பல சேவைகள் அல்லது செயலிகள் தனிப்பட்ட தகவல்களைத் திரட்டுகின்றன. தகவல் அறிக்கைகள் மற்றும் தகவல்களின் பகிர்வு விதிகளைக் கவனமாகப் படித்து, அவற்றின் நிபந்தனைகளை நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும். இணையக் குற்றங்களைச் சந்தித்தால், உடனடியாக பொது பாதுகாப்பு சேவைகள் அல்லது குற்றப் பிரிவுகளுக்குப் புகார் அளிக்கவும். இது குற்றவாளிகளை எளிதாகக் கண்டறிந்து தடுக்க உதவுகிறது.

இணைய அச்சுறுத்தல்கள் தொடர்ந்து பெருகி வருவதால், சமூகத்தில் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. அவற்றை தடுக்க தனிநபர்களும் நிறுவனங்களும் விழிப்புணர்வுடன் இருப்பதோடு, சாத்தியமான இணையத் தாக்குதல்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள செயலூக்கமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஒவ்வொருவரும் பின்பற்றுவதன் மூலமும் இணையக் குற்றங்களைத் தடுக்க முடியும்.

# நயன் – தனுஷ் ஓயாத சர்ச்சை



நடிகை நயன்தாரா அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் நடிகர் தனுஷ் மீது பரபரப்பு குற்றச்சாட்டுகளைக் கூறி இருந்தார். இதனையடுத்து, நயன்தாராவின் அறிக்கைக்கு நடிகைகள் பலர் தங்களது ஆதரவைத் தெரிவித்து இருந்தனர்.

நடிகர் தனுஷுடன் நடித்த நடிகைகள் சிலரும் நயன்தாராவுக்கு ஆதரவு தெரிவித்தனர். அதன்பிறகு சில நடிகைகள் தங்களின் பதிவை நீக்கினார்கள்.

இந்நிலையில், வெளியாகியுள்ள நயன்தாராவின் ஆவண திரைப்படத்தில் நடிகர் தனுஷ் குறித்து சர்ச்சை காட்சிப் பதிவாகி உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

நானும் ரௌடி தான் திரைப்படத்தின் தான் நயன் தாரா - விக்னேஷ் சிவன் இடையே காதல் மலர்ந்தது. இப்படத்தை தனுஷின் வொண்டர்பார் பிலிம்ஸ் தயாரித்து இருந்தது.

நயன் தாரா - விக்கி இடையே காதல் மலர்ந்த சம்பவத்தை , ஆவணப் படத்தில் நினைவுகூர்ந்த நடிகை ராதிகா பேசும் காட்சி இடம் பெற்றுள்ளது.

அப்பொழுது நயன் - விக்கி ஜோடி ஊர் சுற்றுவதைச் சுட்டிக் காட்டி பேசிய தனுஷ் . வெட்கம், மானம் இல்லையா? என தன்னிடம் கேட்டதாக ராதிகா பேசும் காட்சி ஆவண திரைப்படத்தில் இடம் பெற்றுள்ளது. இதனால் தற்பொழுது சர்ச்சை எழும்பியுள்ளது.

# மீனாட்சி சவுத்ரியின் புதிய நிபந்தனை



நடிகர் விஜய்யின் தி கோட், விஜய் ஆண்டனியின் கொலை, ஆர்.ஜே.பாலாஜியுடன் சிங்கப்பூர் சலூன் ஆகிய படங்களில் நடித்துள்ள மீனாட்சி சவுத்ரி குறுகிய காலத்திலேயே முன்னணி கதாநாயகியாக உயர்ந்துள்ளார்.

துல்கர் சல்மான் ஜோடியாக நடித்து தமிழ், தெலுங்கு, மலையாளம் உள்ளிட்ட மொழிகளில் வெளியான லக்கி பாஸ்கர் நல்ல வசூல் பார்த்தது.

இதில் துல்கர் சல்மானின் மனைவி கதாபாத்திரத்தில் நடித்து இருந்தார். இந்த நிலையில் மீனாட்சி சவுத்ரி அடுத்து நடிக்கும் படங்களுக்கு புதிய நிபந்தனை விதித்துள்ளார்.

அவர் கூறும்போது, "நான் தொடர்ந்து சில படங்களில் மனைவி கதாபாத்திரத்திலேயே நடித்து வருகிறேன். லக்கி பாஸ்கர் படத்தில் மனைவியாக நடித்து இருந்த எனக்குப் பாராட்டுகள் கிடைத்தது.

ஆனாலும் சிலர் சினிமாவுக்கு வந்த ஆரம்பக் காலத்திலேயே மனைவி கதாபாத்திரங்களில் நடிக்காமல் இருப்பதுதான் நல்லது. அப்படி நடிக்க உனக்கு இன்னும் காலம் இருக்கிறது என்றனர். எனவே வரும் காலங்களில் இதுபோன்ற கதாபாத்திரங்களில் நடிக்க கூடாது என்று முடிவு செய்து இருக்கிறேன். அடுத்து ஒரு அதிரடி சண்டை படத்தில் நடிக்க இருக்கிறேன். இதில் பொலிஸ் அதிகாரியாக வருகிறேன்" என்றார்.

# 'கலகலப்பு 3'

டுபாய் தொழிலதிபரான கண்ணன் ரவி என்பவர், ஏற்கெனவே சாந்தனு நடித்த 'ராவண கோட்டம்' என்ற படத்தைத் தயாரித்து உள்ளார். நடிகர் பாக்யராஜ் உடன் ஏற்பட்ட நட்பு காரணமாகவே இந்த படத்தை சாந்தனுவை வைத்து அவர் தயாரித்ததாகக் கூறப்பட்டது.

இந்த நிலையில் கண்ணன் ரவி தயாரிக்கும் அடுத்த படம் 'கலகலப்பு 3' என்று அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இந்த தகவலை குஷ்பு தனது சமூக வலைத்தளத்தில் பதிவு செய்துள்ளார்.

கண்ணன் ரவியின் தயாரிப்பு நிறுவனம் மற்றும் குஷ்புவின் அவ்னி சினி மேக்ஸ் ஆகிய இரண்டு நிறுவனங்களும் இணைந்து 'கலகலப்பு 3' படத்தைத் தயாரிப்பதாகவும், இந்த படத்தில் நடிக்கும் நட்சத்திரங்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் குறித்த அறிவிப்பு விரைவில் வெளிவரும் என்றும் 2025 ஆம் ஆண்டு இந்த படம் வெளியாகும் என்றும் கூறப்படுகிறது.

ஏற்கெனவே 'கலகலப்பு', 'கலகலப்பு 2' ஆகிய இரண்டு படங்களும் நல்ல வரவேற்பைப் பெற்ற நிலையில், மூன்றாம் பாகத்தில் முதல் பாகத்தில் நடித்த மிர்ச்சி சிவா மற்றும் விமல் ஆகிய இருவரும் நடிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது.






# நயன்தாராவின் இன்ப அதிர்ச்சி




நடிகை நயன்தாரா திங்கட்கிழமை(18) தனது பிறந்தநாளைக் கொண்டாடிய நிலையில், அவருடைய புதிய திரைப்படத்தின் அறிவிப்பு வெளியாகி ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்துள்ளது.

ஏற்கெனவே 'தி டெஸ்ட்' உள்ளிட்ட சில திரைப்படங்களில் நடித்து வரும் நயன்தாரா, டிரம்ஸ்டிக் புரொடக்ஷன்ஸ் என்ற நிறுவனத்தின் தயாரிப்பில் புதிய படத்தில் நடிக்க இருப்பதாக சில நாட்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், நயன்தாராவின் பிறந்தநாளில், இப்படத்தின் டைட்டில் உடன் கூடிய ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகியுள்ளது. இந்த படத்திற்கு 'ராக்காயி' என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளது. வெளியாகியுள்ள பர்ஸ்ட் லுக் போஸ்டரில், கையில் ஆயுதங்களுடன், கிராமத்து மக்களால் சூழப்பட்ட நயன்தாரா, ஆவேசமாக உள்ளார்.



# பதவிப் பிரமாணம்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கத்தின்
புதிய அமைச்சரவை அமைச்சர்கள் திங்கட்கிழமை (18) ஜனாதிபதி செயலகத்தில்
பதவிப் பிரமாணம் செய்து கொண்டபோது...



கல்வி, தொழிற்கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சராக பிரதமர் ஹரினி அமரசூரிய பதவியேற்றுள்ளார்.



வெளிவிவகாரம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு, சுற்றுலாத்துறை அமைச்சராக விஜித ஹேரத் பதவியேற்றுள்ளார்.



பொது நிர்வாக மாகண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சராக கலாநிதி சந்தன அபேரத்ன பதவியேற்றுள்ளார்.





போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறைமுகம் சிவில் விமான போக்குவரத்து அமைச்சராக பிமல் நிரோஷன் ரட்நாயக்க பதவியேற்றுள்ளார்.



பௌத்த சாசன அமைச்சராக பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி பதவியேற்றுள்ளார்.



நீதி, தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சராக சட்டத்தரணி ஹர்சன நாணயக்கார பதவியேற்றுள்ளார்.



மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சராக சரோஜா சாவித்திரி போல்ராஜ் பதவியேற்றுள்ளார்.



சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சராக வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ பதவியேற்றுள்ளார்.



பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சராக சமந்த வித்யாரத்ன பதவியேற்றுள்ளார்.



விவசாயம், காணி, கால்நடை மற்றும் நீர்ப்பாசனம் அமைச்சராக லால் காந்த பதவியேற்றுள்ளார்



நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சராக அநுர கருணாதிலக பதவியேற்றுள்ளார்.



இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சராக சுனில் குமார கமகே பதவியேற்றுள்ளார்



வர்த்தகம், வாணிபம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சராக வசந்த சமரசிங்க பதவியேற்றுள்ளார்.



கடற்றொழில் மற்றும் நீரியியல் கடல் வளங்கள் அமைச்சராக ராமலிங்கம் சந்திரசேகர் பதவியேற்றுள்ளார்.



கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு, சமூக வலுவூட்டுகை அமைச்சராக உபாலி பன்னிலகே பதவியேற்றுள்ளார்.



விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சராக கலாநிதி கிருஷாந்த சில்வா அபேயசேன பதவியேற்றுள்ளார்.



தொழில் அமைச்சராக கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ பதவியேற்றுள்ளார்.



கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சராக சுனில் ஹந்துன்னெத்தி பதவியேற்றுள்ளார்.




பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சராக ஆனந்த விஜயபால பதவியேற்றுள்ளார்.



வலுசக்தி அமைச்சராக பொறியியலாளர் குமார ஜயகொடி பதவியேற்றுள்ளார்.



சுற்றாடல் அமைச்சராக வைத்தியர் தம்மிக்க பட்டபெந்தி பதவியேற்றுள்ளார்



பாகிஸ்தான்

## தீவிரமடையும் காற்று மாசு:
# 19 இலட்சம் பேர் பாதிப்பு

பாகிஸ்தானில் காற்று மாசு தீவிரமடைந்துள்ளதால், கடந்த மாதத்தில் மட்டும் 19 இலட்சம் பேர் மூச்சுப் பிரச்சினை காரணமாக அரசு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

குறிப்பாக, பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாணத்தில் காற்றின் தரம் மிக மோசமாக உள்ளது. அங்குள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காகக் கூட்டம் நிரம்பி வழிவதாகக் கூறப்படுகிறது.

காற்று மாசுபாட்டால் குழந்தைகளும், வயதானவர்களும் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருகிற நிலையில், பள்ளிகளுக்கு விடுமுறை அளித்தல், வாகனப் பயன்பாட்டுக்குக் கட்டுப்பாடு விதித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளைப் பாகிஸ்தான் அரசு மேற்கொண்டுவருகிறது.

எனினும், முக்கிய நகரங்களில் காற்று மாசை கட்டுப்படுத்த முடியாத சூழல் நிலவுகிறது. லாகூரில் காற்று தரக் குறியீடு 1,000த்தை தாண்டியுள்ளது. சமீபத்தில் முல்டானில் காற்று தரக் குறியீடு 2,000ஐ தாண்டியது.

காற்று தரக் குறியீடு (ஏக்யூஐ) 0-50 வரையில் இருந்தால் காற்றின் தரம் நன்றாக இருப்பதாகவும், 51-100 (திருப்தி), 101 - 200 (பரவாயில்லை), 201 - 300 (மோசம்), 301-400 (மிக மோசம்), 401 -450 (தீவிரம்), 450-க்கு மேல் (மிகத் தீவிரம்) என்று வகைப்படுத்தப்படுகிறது.



## நியூசிலாந்துக்கெதிரான
# தொடரைக் கைப்பற்றிய இலங்கை

நியூசிலாந்துக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை இலங்கை கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்றிருந்த இலங்கை, பல்லேகலவில் ஞாயிற்றுக்கிழமை(17) நடைபெற்ற இரண்டாவது போட்டியில் வென்றமையைத் தொடர்ந்து இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

நியூசிலாந்து: 209/10 (45.1/47 ஓவ.) (துடுப்பாட்டம்: மார்க் சப்மன் 76 (81), மிற்செல் ஹே 49 (62), வில் யங் 26 (40) ஓட்டங்கள். பந்துவீச்சு: மகேஷ் தீக்‌ஷன 3/31, ஜெஃப்ரி வன்டர்சே 3/46, அசித பெர்ணாண்டோ 2/37, சரித் அசலங்க 1/29, டுனித் வெல்லலாகே 1/46)

இலங்கை: 210/7 (46/47 ஓவ. ) (துடுப்பாட்டம்: குசல் மெண்டிஸ் ஆ.இ 74 (102), பதும் நிஸங்க 28 (33), மகேஷ் தீக்‌ஷன ஆ.இ 27 (44), ஜனித் லியனகே 22 (39) ஓட்டங்கள். பந்துவீச்சு: மிஷெல் பிறேஸ்வெல் 4/36, நாதன் ஸ்மித் 1/21, மிற்செல் சான்ட்னெர் 1/33, கிளென் பிலிப்ஸ் 1/41)

போட்டியின் நாயகன்: குசல் மெண்டிஸ்

இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இங்கிலாந்து

# ரூ.16 கோடிக்கு
## ஏலமிடப்பட்ட கடிகாரம்



டைட்டானிக் விபத்தில் நூற்றுக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றிய கெப்டன் ஆர்தர் ரோஸ்ட்ரானுக்கு பரிசாக வழங்கப்பட்ட பாக்கெட் கடிகாரம், ரூ.16 கோடிக்கு (இந்தியப் பெறுமதி) ஏலம் எடுக்கப்பட்டு அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

டைட்டானிக் நினைவுச் சின்னங்கள் ஏலம் விடப்பட்டதில் மிக அதிக தொகைக்கு வாங்கப்பட்ட கலைப்பொருள் என்ற பெருமையை, இந்த பாக்கெட் கடிகாரம் பெற்றுள்ளது. கடந்த 1912இல் வடக்கு அட்லாண்டிக் பெருங்கடலில் சென்று கொண்டிருந்த டைட்டானிக் கப்பல், திடீரென பனிப்பாறையில் மோதி விபத்துக்குள்ளானது. அதில் 2,200க்கும் மேற்பட்டோர் பயணம் செய்த நிலையில் 1,500 பேர் தண்ணீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.

எஞ்சியிருந்த 705 பயணிகள் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த நிலையில் அவர்களைக் காப்பாற்றிய பெருமை கெப்டன் ஆர்தர் ரோஸ்ட்ரானையே சாரும்.

ரோஸ்ட்ரான் காப்பாற்றியவர்களில் ஜான் பி தையர், ஜான் ஜேக்கப் ஆஸ்டர் மற்றும் ஜார்ஜ் டி வைட்னர் ஆகிய மூன்று பெண்களும் அடங்குவர். அவர்கள், தங்களது உயிரை காப்பாற்றியதற்காக டிஃப்பனி அண்ட் கோ நிறுவனத்தின் 18 காரட் பாக்கெட் கடிகாரத்தை கேப்டன் ரோஸ்ட்ரானுக்கு பரிசாக வழங்கினர்.

# மோடிக்கு உயரிய விருது

நைஜீரியா

பிரதமர் மோடிக்கு நைஜீரிய நாட்டின் உயரிய விருது வழங்கி கௌரவிக்கப் பட்டது.

நைஜீரியா, பிரேசில், கயானா நாடுகளுக்கு 5 நாள் பயணமாக பிரதமர் மோடி புறப்பட்டு சனிக்கிழமை(16) சென்றார். கடந்த 17 ஆண்டுகளில் நைஜீரியாவுக்கு இந்திய பிரதமர் செல்வது இதுவே முதல்முறை. நைஜீரிய தலைநகர் அபுஜாவுக்கு சென்ற மோடியை, அந்நாட்டின் அமைச்சர் நேசாம் எசன்வோ விகே வரவேற்றார்.

இந்தியாவும், நைஜீரியாவும் பல துறைகளில் இணைந்து செயல்பட வேண்டும் என 2007இல் முடிவு செய்யப்பட்டது. அந்த நட்புறவை மேம்படுத்தும் பேச்சு வார்த்தையில் பிரதமர் மோடி ஈடுபட்டார்.



பொருளாதாரம், எரிசக்தி, பாதுகாப்பு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடந்தது.

நைஜீரியாவில் பிரதமர் மோடிக்கு அந்நாட்டின் உயரிய தேசிய விருதான 'கிராண்ட் கமாண்டர் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் தி நைஜர் வழங்கப் பட்டது. விருதை பெற்ற பின் பிரதமர் மோடி கூறுகையில், "நைஜீரியாவின் மிக உயர்ந்த விருதை பணிவுடன் ஏற்றுக் கொண்டு, இந்தியாவின் 140 கோடி மக்களுக்கும் அர்ப்பணிக்கிறேன்" என்றார்.



# புலிசிச்சை வட்டமிடும் பிறீமியர் லீக் கழகங்கள்

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஏ.சி மிலனின் முன்களவீரரான கிறிஸ்டியன் புலிசிச்சைக் கைச்சாத்திட இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகங்களான லிவர்பூல், மன்செஸ்டர் யுனைட்டெட், வெஸ்ட் ஹாம் யுனைட்டெட் ஆர்வம் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மிலனுக்கான சிறப்பாக 26 வயதான புலிசிச் விளையாடி வருகின்ற நிலையில் அவரை இழக்க அக்கழகம் விரும்பாதபோதும் 60 மில்லியன் யூரோக்கள் கிடைக்கப் பெற்றால் கடந்த காலங்களைப் போல பொருத்தமான தொகைக்கு சிறந்த வீரர்களை மிலன் விடுவிக்குமென்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 2027ஆம் ஆண்டு வரையில் மிலனுடன் புலிசிச் ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கிறாரென்பது குறிப்பிடத்தக்கது.

## அவுஸ்திரேலியாவுக்கெதிரான
# முதலாவது டெஸ்டைத் தவறவிடும் றோஹித்




அவுஸ்திரேலியாவுக்கெதிரான முதாலவது டெஸ்டில் இந்திய அணித்தலைவர் றோஹித் ஷர்மா பங்கேற்க மாட்டார்.

தனது இரண்டாவது பிள்ளையின் பிறப்புக்காக இந்தியாவிலிருக்கும் றோஹித், இரண்டாவது டெஸ்டுக்கு முன்பாக குழாமுடன் இணைந்து கொள்ளவுள்ளார்.

இந்நிலையில் ஜஸ்பிரிட் பும்ரா இந்தியாவுக்குத் தலைமை தாங்கள்ளார்.

றோஹித்தை லோகேஷ் ராகுல் அணியில் பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

ராகுல், ஷுப்மன் கில்லைப் பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படும் அபிமன்யு ஈஸ்வரன் அண்மைய போட்டிகளில் பெரிதாகப் பிரகாசிக்காத நிலையில் துடுப்பாட்ட சகலதுறைவீரரான நிதிஷ் குமார் ரெட்டி அல்லது பந்துவீச்சு சகலதுறைவீரர் ஹர்ஷித் ரானாவை அணியில் சேர்ப்பதன் மூலம் துடுப்பாட்டத்தைப் பலப்படுத்த முயலுமென எதிர்பார்க்கப்படுகிறது.



ராஜஸ்தான்

## யாத்திரை பஸ் விபத்து:
# மூவர் பலி; 13 பேர் காயம்

ராஜஸ்தான் மாநிலம் - பண்டி மாவட்டத்தில் தனியார் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில், மூவர் உயிரிழந்ததுடன், 13 பேர் காயமடைந்துள்ளனர்

பக்தர்களைப் புனித யாத்திரை அழைத்துச் சென்ற பஸ் ஒன்றே, ஞாயிற்றுக்கிழமை (17) அதிகாலை 2 மணியளவில் இவ்வாறு விபத்துக்குள்ளானது.

பஸ்சில் 43 பயணிகள் இருந்தனர். அவர்கள் யாத்திரையை முடித்து விட்டு ஊர் திரும்பிக் கொண்டிருந்தனர். இதன்போது, லால்சாட்- கோடா மேகா நெடுஞ்சாலையில் வந்து கொண்டு இருந்தபோது, சாலையிலிருந்த பள்ளத்தைத் தவிர்ப்பதற்காகச் சாரதி பஸ்ஸை திருப்பினார்.

இதன்போது வீதியோரத்தில் இருந்த மின்கம்பத்தில் மோதி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் பஸ்சில் இருந்த அரவிந்த் சிங்(62), அந்திம்குமார் (28), பஸ் நடத்துநர் மங்கிலால் ரத்தோர்(60) ஆகியோர் உயிரிழந்தனர். மேலும் 13 பயணிகள் காயமடைந்தனர்.

உத்திரப் பிரதேசம்

## அரச வைத்தியசாலையில்
# தீ விபத்து; 11 குழந்தைகள் பலி



உத்தரப் பிரதேசம் - ஜான்சியில் உள்ள மகாராணி லட்சுமிபாய் கல்லூரியின் பிறந்த குழந்தைகளுக்கான அவசர சிகிச்சைப் பிரிவில், கடந்த வெள்ளிக்கிழமை(15) இரவு 10.45 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது.

இதில் 11 குழந்தைகள் உயிரிழந்ததுடன். 16 குழந்தைகள் படுகாயமடைந்த நிலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இதற்கான காரணத்தைக் கண்டறியச் சிறப்பு பொலிஸ் குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவின் விசாரணையில், "இது திட்டமிட்ட நடத்தப்பட்ட சம்பவம் அல்ல. தன்னிச்சையாக நடந்த ஒரு விபத்து. மின்கசிவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டதுள்ளது.

" குழந்தைகள் வார்டில் ஸ்பிரிங்லர்கள் பொருத்தப்படாததால், தீயைக் கட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை" என்று கண்டறியப்பட்டுள்ளதாக, தகவல் வெளியாகியுள்ளது.

விசாரணைக் குழுவின் விரிவான அறிக்கை விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தேசங்களுக்கான லீக்:
# இஸ்ரேலிடம் தோற்ற பெல்ஜியம்
### இத்தாலியை வென்ற பிரான்ஸ்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் தேசங்களுக்கான லீக் தொடரில், ஹங்கேரியில் திங்கட்கிழமை (18) நடைபெற்ற இஸ்ரேலுடனான குழு பி போட்டியொன்றில் 0-1 என்ற கோல் கணக்கில் பெல்ஜியம் தோற்றது.

இஸ்ரேல் சார்பாகப் பெறப்பட்ட கோலை யர்டென் ஷுவா பெற்றிருந்தார்.

இதேவேளை, இத்தாலியில் நடைபெற்ற இன்னொரு குழு பி போட்டியில் அவ்வணியை 3-1 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் வென்றது. பிரான்ஸ் சார்பாக அட்ரியன் றபியொட் இரண்டு கோல்களைப் பெற்றதோடு, மற்றைய கோலை அன்ட்ரீயா கம்பியாஸோ பெற்றிருந்தார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 19 நவம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.